[illegible]

[illegible]

[illegible]

Q23:417
N25
181275

4

185 185

உ

நடராஜப்பெருமான் துணை.

நன்னிலம் தாலுக்கா மேலத்திருமுதுகுன்றம்


ஸ்ரீ ஆனந்தவல்லி சமேத

நடராஜப்பெருமான் திருவாதிரை

# இரதோற்சவத்

# தெரிசனானந்தம்.

REGISTRAR OF ... 8-JAN-26 ... MADRAS



நாகை — கருவேலி

ப. வீரப்பத் தஞ்சவரராயரால்

இயற்றியது.

---

விஜயபுரம்

...ருணாநிதி அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

1925.

Q23:417
N25
181225

உ

நடராஜப்பெருமான் துணை.

# மேலத்திருமுதுகுன்றம்
# ஸ்ரீ ஆனந்தவல்லி சமேத நடராஜபெருமான்
# திருவாதிரை ரதோற்சவ தெரிசனானந்தம்.

2378
894.814

## காப்பு—கணேசர் துதி.

சீருலா மலங்கற் பாமுது குன்றச்
சிற்சபை யரன்கழற் கிணைப்பத்
தாருலா மயிரா வதத்தமர் புனிதன்
றடவன நந்தனஞ் செழிப்ப
வேருலா மலயத் திருந்தமா முனிவ
னெழிற் கரக் கரகநீர் கவிழ்த்த
வாருலாம் புழைக்கை மதகரி முகத்தான்
மருமலர்ப் பதம் வணங்குதுமே.

## அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

சீராளுஞ் செந்நெறியிற் றிறம்பிடா தேரோம்பிச்
செல்வ மோங்குங்
காராளர் குலவிளக்காய்க் கண்ணியமும் புண்ணியமுங்
கமழ்வீ ரப்பப்
பேராளும் பெருந்தகையி னுள்ளத்து மில்லத்தும்
பிறங்கு வோனைத்
தாராளுந் தோளானைக் கண்குளிர வாதிரையிற்
றரிசித் தேனே. (1)

வித்தகப்பைங் கிளியொருபான் மேவவரும் பவனியதை
விரும்பு வார்க்கும்
புத்திரமித் திரகளத்தி ராதியொடு போகபோக்
கியமு மாறில்

பத்தியுநற் புத்தியுவித் தையுந்தந்து பரகதியும்
பாலித் தின்னுஞ்
சித்தியெலாம் வழங்கியருள் செல்வனையா திரைநாளிற்
றெரிசித் தேனே. (2)

பம்புறுமத் தளமேள தாளமுயர் நாகசுரம்
பயில்தம் பட்டங்
கொம்புமுதற் பல்லியமு முழங்குதொனி கடலொலியுங்
குறுகிற் றென்ன
வும்பரடைந் தமரர்செவி யடைப்பவருந் திருப்பவனி
யூர்கோ லத்தைக்
கண்படைத்த பேறெய்ய வாதிரையிற் கண்டுமனக்
களிப்புற் றேனே. (3)

பாரப்ப னிலநெருப்பா காயமெனப் பரந்தபரம்
பரனை நெஞ்ச
மாரப்ப ணியியற்று மன்பனரு ளறிவுபொறை
யாதி சான்ற
வீரப்ப னிதயமலர்த் தவிசமரு வோனைரத
மீதி லன்பு
சேரப்ப வனிவரவா திரைநாளிற் கண்குளிரத்
தெரிசித் தேனே. (4)

வான்குளிர கருணைபொழி மாமழையைத் தெய்வமெலாம்
வணங்குந் தேவைத் [குன்றச்
தேன்குளிர மலர்விரியுஞ் செழும்பொழில்சூழ் முது
செல்வன் றன்னை
யூன்குளிர வுளங்குளிர வுயிர்குளிர வுயிர்க்குயிறு
ழோங்கு கண்க
டாங்குளிரத் தேங்குதிரு வாதிரையிற் றீதகலத்
தரிசித் தேனே. (5)

181275

விண்டயனுங் காண்பரிய விமலனையாங் கண்ணுறவே
வீரப் பப்பே [டன்றே
றொண்டவன்செய் தானம்மா தொண்டிலவன் றெண்
வுயர்தொண் டாகுந்
தெண்டிரைசூழ் வியனுலகி லவனெடுத்த சென்மமன்றே
சென்ம மென்று
கண்டவரெல் லாம்புகழ வாதிரையில் வரும்பவனி
கண் ணுற் றேனே. (6)

சம்புசிவ சங்கரசி வாகமசி வாயவெனத்
தடங்கை கூப்பிக்
கம்பலையுற் றுடல்விதிர்ப்ப மயிர்பொடிப்ப வானந்தக்
கண்ணீர் சிந்து
மன்பர்தமை யஞ்சலீ ரென்றருள முதுகுன்றி
லமர்ந்திட் டானைச்
செம்பவள மேனியனைக் கண்குளிர வாதிரையிற்
றெரிசித் தேனே. (7)

தன்னளினப் பதமறவாத் தன்மையன்வீ ரப்பனெனச்
சாற்று நாமன்
பன்னரிய வன்புவலைப் பட்டவற்குத் தன்வீடு
பாலித் தாள
அன்னவன்றன் வீட்டிலுமுள் வீட்டிலுவந் தார்ந்தருளு
மவனை யெந்த
னின்னலற முதுகுன்றி லாதிரைநாட் கண்ணுற்றே
னின்புற் றேனே. (8)

தேன்பிறந்த செழுங்கொன்றைச் செஞ்சடிலச் சென்னி
தேடித் தேடி [யனைத்
வான்பிறந்த கடவுளருங் காண்பரிய வன்மையனை
வைய மீதி

னான்பிறந்த பேறெய்த வீடெய்தச் சீரெய்த
நான்சென் றோடிக்
கான்பிறந்த கடிமலர்ப்பூம் பொழிறிகழு முதுகுன்றிற்
கண்ணுற் றேனே. (9)

இல்லையெனுஞ் சொல்லறியா வீரப்பப் பேருடையா
னிதய வாழ்வைப்
புல்லர்மனம் புல்லாத புண்ணியனைக் கண்ணுதலைப்
புனித வாழ்வை
யெல்லையிலாப் பெருங்கருணைத் தடங்கடலை யெம்மானை
யெனது வாழ்வைத்
தில்லையெனும் புகழ்பரவு முதுகுன்றத் தாதிரையிற்
றெரிசித் தேனே (10)

கண்ணாருந் திருநெற்றிக் கடவுளையெங் கண்மணியைக்
கரும்பைத் தேனைப்
பண்ணாரும் பசுமழலைப் பைங்கிளியோர் பான்மருவும்
பவளக் குன்றை
யெண்ணாருந் தவமுடைய விருடியருங் காண்பரிய
வியல்பி னானைத்
தண்ணாரும் பொழிறிகழு முதுகுன்றத் தாதிரையிற்
றரிசித் தேனே. (11)

பொன்மயமாம் பெருங்கருணைக் குன்றையென துளமாடும்
பொருளை யானுந்
தன்மயமாய் நின்றிலகுந் தற்பரனை முக்கணனைச்
சகச வாழ்வை [யின்
மென்மலர்ப்பூம் பொதும்பர்முது குன்றமொளிர் சிற்சபை
மிளிர்வோன் றன்னை
சின்மயனை யெனதுகுல தெய்வமதை யாதிரையிற்
றெரிசித் தேனே. (12)

18|2525

விடையேறும் பெருமானை யயன்மாலு மறியாத
மேலோன் றன்னைத்
தொடியேறுங் கரமானை யுடையானைக் கமழ்கொன்றைத்
தொடையலானைக்
கொடியேறு மால்மரங்கட் பொதும்பர்மலி மேலமுது
குன்றத் தோனைச்
சடையேறும் புனன்மாதுக் கினியானை யாத்திரையிற்
றரிசித் தேனே. (13)

Q23:4417 N25

வேறு.

தெண்ணருக் கொழிக்குஞ் சோலைத் திருமுது குன்றமேய
வெண்ணிலா விரிந்த வேணி விமலனை யமலானந்த
வண்ணலை யமரர்கோவை யாத்திரை தினத்து நான்செய்
புண்ணிய மிகுதியாற் கண் டின்றுயர் போக்கினேனே (14)

மாதர்கள் வதனங் கண்டு மதியென விரியு நீலச்
சீதநீர்ப் பொய்கை சூழுந் திருமுது குன்றமேய
வாதவன் றன்னை யான்ற வாத்திரை தினத்து நான்செய்
மாதவந் தன்னாற் கண்டேன் மனவிரு ளொழித்திட்டேனே
(15)

அன்னவா கனனு மாலு மறிவற நிவந்த சோதிச்
சென்னிநா யகனை மேலைத் திருமுது குன்ற மேய
வந்நகைக் கேள்வன் றன்னை யாத்திரை தினத்து நான்முன்
முன்னிய நோன்பி னாற்கண் டென்பவ முடித்திட்டேனே.
(16)

சாத்திர மளவு காணாத் தனியனைத் தமிய னேன்றன்
கோத்திர முழுது மாளக் குறித்திவண் குடிகொண்டானை
யாத்திரை தினத்தி யான்செய் யருந்தவ முன்னுமாற்றா
னேத்திரங் குளிரக்கண்டின் னிறைகடற் றிளைத்தேனன்றே.

புறந்தொழு வோர்கட் கெல்லாம் பொய்யனுப் பொய்மைதீர்ந்து
திறந்தெரிந் துருகுவோர்க்குத் தெளிதரு மெய்யனாகி
யறந்திகழ் தரச்செய் வோனை யாதிரை தினத்து நான்செய்
மறந்தபு ஞேன்பி ஞற்கண் டென்வினை மாய்த்தே னன்றே. (18)

என்னுயிர்க் குயிரை யெந்த னிணைவிழி மணியை வாழ்வைத்
தொன்னக மிளிர் ஞாயிற்றைத் தோன்றாத் துணையை யென்னை
யன்னிய ருறவென்னும லாதரித் தருளுவானை
மன்னு மா திரையிற் கண்டு மாசுகந் திளைத்தேனம்மா (19)

## அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

அண்ட ரெலாஞ் செவிக்கமுதாய்ப் பருகியா னந்தமுற
அவனி வாழுந்
தொண்டரெலாஞ் செவிபடைத்தபேறடைந்தோ மெனத்துதிக்கத்
துகளில் கீதம்
எண்டருதிக் கும்பரவப் பவனிவரு நடராஜன்
எழிற்கோ லத்தைக்
கண்டவரே கண்ணுடையார் கண்ணுதலார் தண்ணுடையார்
கதியு ளாரே. (20)

விதிபடைத்த பேருலகி ரிதுகேண்மி னுயர்கல்வி
வித்தை வேண்டில்
நிதிபடைத்த நிலைவேண்டில் நீர்படைத்த மகர்வேண்டில்
நித்ய மாய
துதிபடைத்த பதம்வேண்டில் துலாம்படைத்த ஆதிரையாந்
தூய நாளில்
நதிபடைத்த சடையுடையான் நார்படைத்த பவனிவர
நன்று காண்பீர். (21)

## வேறு.

மணிகொண்ட மாசுணப் பண்ணவன் காணமணி
மாசுணப் பணிக ளாட
மணிமன்றி லேநடன மிடுநாட கத்தெய்வ
மங்கையோர் பங்கின் மருவக்

கணிகொண்ட வளமேலை முதுகுன்ற நகரில்வாழ்
காராளர் குலதீப மாங்
கான்ரஞ் சிதவசன விதரணக லாநிபுண
காருண்ய சீல சுகுண
வணிகொண்ட வங்கசகொ ரூபவுல்லாச வெம
மண்ணல்வீ ரப்பவள்ள
லார்ந்துவாழ் கின்றபே ரில்லமே மாநடன
வாலயம தாக் கொண்டநாட்
டணிகொண்ட சீர்திகழ் சித்தார்த்தி யாண்டினிற்
சேர்பங் குனித் திங்களிற்
றினமதோர் நாலைந்திற் பூரநட் சத்திரந்
திகழ்ந்த பொன் வாரமதுவே. (22)

வேறு.

தில்லையாடி கிடுக்கிட்டி சீனிவாச வாத்தியக்காரர் இயற்றியது.

சீருலவு பதுமமல ரயனுற் படைத்துச்
செழிப்புற்று வாழுமுலகிற்
செல்வமொடு கல்வியுந் திடகாத்ர சித்தமுந்
தெய்வவழி படுசிந்தைபு
மேருலவு தவமுங் குபேர சம்பத்துநல்
லீகையுந் தீர்க் காயுளு
மிகபரப் பிரயோ சனங்களு மளித்தெமை
யிரக்ஷிக்கவே யெழுந்து
பாருலவு வளமோங்கி மேலதிரு முதுகுன்ற
பதிதனி லமர்ந்து நாளும்
பத்தியொரு மித்து துதி யுத்தமரை சுத்தபர
வத்துவொடு முத்திதருவான்
குருலவு வோசை வீரப்ப வள்ளலிரு
தயகமல நடுவினின்றே

சந்தத மிருந்தொரு பதம் பொரு நடம்புரி
சபா நாயகத் தெய்வமே. (23)

## கோவில்பத்து சிவசுப்பிரமணிய பிள்ளை அவர்களியற்றிய கீர்த்தனம்.

இராகம் லதாங்கி-தாளம்-ஆதி.

### பல்லவி.

சிந்தாமணியே தெய்வநடராஜ
சிங்கமே யென்சிந்தையில் சீராய்வாழும் (சிந்தா)

### அநுபல்லவி.

எந்தையேநினைச் சந்ததம் நினைந்தேன்
ஏகநாயகனே யிங்கிதயோகனே (சிந்தா)

### சரணம்.

மேலத்திருமுது குன்றந்தனிற்றங்கும்
வீரப்பவள்ளலி னுள்ளத்தில் விளங்கும்
கோலத்தை நினைந்தா லானந்த கூத்தெங்கும்
கோரி மறைதேடி கூவியேமயங்கும் (சிந்தா)

### வாழி விருத்தம்.

சீரார் முதுகுன் றமர்ந்தொளிரும்
சிற்ச பேச னடிவாழி
வாரார் சொர்க்கத் தானந்த
வல்லி கமல மலர்வாழி
நேரார் நிலையைக் கடைப்பிடித்த
நீதா வாழி நிலவுலகில்
பேரார் பத்தி நெறிநிற்போர்
பெரிதும் வாழி வாழியவே.

Q23:417
N45
181225

கருணாநிதி பிரஸ்—விஜயபுரம் 25-gdvs

வேதாந்த பாஸ்கரன் இரண்டாம்பாகமாகிய

# ஞானக்களஞ்சியம்.

ஆரம்ப அப்பியாசிகள் முதன்முதல் என்னென்னசெய்யவேண்டும்என்பதிலிருந்து, பிரம்ம சைதன்னிய கைவல்யத்தை அடையும் வரையில் சிறுவர்களும் தெரிந்துகொள்ளும் விதமாக இந்நூலை எழுதியிருப்பதால், 4 பாகங்களையும் 4 ஞான வேதமென்றே அறிஞர்கள் புகழ்கிறார்கள். இந்நூற்களை வாசித்தவர்கள் பாக்கியமே ! பாக்கியம் !! மழமழப்பான வெள்ளை கிளேஸ் காகிதத்தில் 450 பக்கங்கள் வரையில் அனேக ஆப்டோன் அப்பியாசப் படங்களுடன் கூடியது.

மானேஜர்:—

கருணாநிதி அச்சியந்திரசாலை,

விஜயபுரம், திருவாரூர் S. I. Ry.

9A
10-29